# 13-09-2023 செய்தி

## இந்தியா, மத்திய கிழக்கு ஐரோப்பாவை இணைக்கும் 6,000கி.மீ. தொலைவு பொருளாதார வழித்தடம்

**பெல்ட் & ரோடு**

- 2013ம் ஆண்டில் 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டத்தை சீனா தொடங்கியது.
- இதன்படி மத்திய ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகளை கடல், ரயில், சாலை வழியாக இணைக்கும் பணிகளை சீன அரசு மேற்கொண்டு வருகிறது.
- இந்த திட்டத்தில் இதுவரை 154 நாடுகள் இணைந்திருப்பதாக கூறப்படுகிறது.
- சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டத்தில் இணைந்த இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கடன் சுமை தாங்காமல் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகின்றன. இதன் காரணமாக 'பெல்ட் அண்ட் ரோடு திட்டம்' முடங்கியிருக்கிறது.
- உக்ரைன் போருக்குப் பிறகு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், சீனாவை முழுமையாகப் புறக்கணித்து வருகின்றன.
- தற்போதைய சூழலில் வளைகுடா நாடுகள், ஆப்பிரிக்க நாடுகளுடன் சீனா நட்பு பாராட்டி வருகிறது.
- இதற்கும் பிரதமர் மோடி முற்றுப்புள்ளி வைத்துள்ளார். ஜி-20 அமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியத்தை இணைத்து ஒட்டுமொத்த ஆப்பிரிக்க நாடுகளின் ஆதரவை அமெரிக்கா, இந்தியாவின் பக்கம் பிரதமர் மோடி திருப்பியிருக்கிறார்.

**அமெரிக்கா, சவுதி உறவு**

- அமெரிக்காவின் 'தி வாஷிங்டன் போஸ்ட்' நாளிதழ் நிருபர் ஜமால் கஸோகி படுகொலைக்கு சவுதி இளவரசர் சல்மானே காரணம் என்று அமெரிக்கா குற்றம் சாட்டியதால் அமெரிக்கா, சவுதி இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. இதன் எதிர் விளைவாக சீனாவுடன் சவுதி நெருக்கம் காட்டி வந்தது.

IMEC

- இந்தியா, மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளை கடல், ரயில், சாலை வழியாக இணைக்கும் மாபெரும் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- இந்த திட்டத்தில் இந்தியா, அமெரிக்கா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஐரோப்பிய ஒன்றியம், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி நாடுகளி கையெழுத்திட்டன.
- ஐ.எம்.இ.சி என்றழைக்கப்படும் புதிய பொருளாதார வழித்தட திட்டத்தின் மூலம் சீனாவின் 'பெல்ட் அன்ட் ரோடு' திட்டத்துக்கு இந்தியா நேரடியாக சவால் விடுத்திருக்கிறது.
- ஐ.எம்.இ.சி வழித்தடம் சுமார் 6,000கி.மீ நீளம் கொண்டதாகும். இதில் 3,500 கிமீ தொலைவு கடல் வழி பாதை ஆகும். புதிய வழித்தடத்தின் மூலம் இந்தியாவின் தாயரிப்புகள் மிக விரைவாக ஐரோப்பிய நாடுகளை சென்றடையும்.
- தற்போது இந்தியாவில் இருந்து புறப்படும் சரக்கு கப்பல் ஜெர்மனியை சென்றடைய சுமார் 36 நாட்கள் ஆகிறது. புதிய வழித்தடம் செயல்பாட்டுக்கு வரும் போது 14 நாட்களில் இந்திய சரக்குகள், ஜெர்மனியை சென்றடையும். இதன் மூலம் நேரமும் செலவும் சேமிக்கப்படும்.

**இந்தியா – மத்திய கிழக்கு – ஐரோப்பா பொருளாதார பாதை**

- வர்த்தகம் மற்றும் போக்குவரத்து பாதை இணைப்பு
- இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா
- தற்போது வரை திட்ட நிலையில் தான் உள்ளது.
  - வடக்கு வழித்தடம்
  - கிழக்கு வழித்தடம்

## கோனார்க் அல்லது அர்கா கேத்ரா

**அடிப்படை**

இருப்பிடம்

- ஒடிசா மாநிலத்தில் உள்ளது
- "கோனா" - மூலை, "அர்கா" - சூரியன்
- சூரியனின் தோற்றம்
- சூரியனுக்காக ஏற்படுத்தப்பட்ட கோவில்
- 13ம் நூற்றாண்டில் முதலாம் நரசிம்ம தேவரால் கட்டப்பட்டது.
- யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளம்

**கோனார்க் சக்கரம்**

- கோனார்க் கோவில் 24 சக்கரங்கள் கொண்ட ரதமானது 7 குதிரை கொண்டு இழுக்கும் விதத்தில் கட்டப்பட்டுள்ளது.

**விளக்கம் 1**

- குதிரைகள் ஒரு வாரத்தின் ஏழு நாட்களையும், சக்கரத்தின் ஜோடி – ஒரு வருடத்தின் 12 மாதத்தையும், மொத்த சக்கரத்தின் எண்ணிக்கை – ஒரு நாளின் 24 மணி நேரத்தையும் குறிக்கும்.

**விளக்கம் 2**

- சக்கரங்கள் ஜோடி – 12 ஆனது ராசி சின்னத்தை விளக்கும்.

- நடைமுறையில் உள்ள சர்வதேச வடக்கு, தெற்கு போக்குவரத்து வழித்தடம் (INSC) மீது செயல்படுத்தப்படும்.
- – இந்தியாவிலிருந்து ஈரான் மற்றும் ரஷ்யா

**நன்மைகள்**

- வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டுறவு மேம்பாடு
- இந்திய மற்றும் ஐரோப்பவிற்கு இடையே புதிய மற்றும் கூடுதலான திறனுடைய பாதையை வழங்கும்.
- மூன்று பிராந்தியங்களுக்கு இடையே போக்குவரத்து செலவை குறைக்கும்.
- முதலீட்டை அதிகரிக்கும், வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் இணைப்பை மேம்படுத்தும்.

**சீனாவிற்கு எதிரான சவால்**

- உலகளாவிய உள்கட்டமைப்பு முதலீட்டுக்கான முன்னெடுப்பு

**குறிக்கோள்**

- வளரும் நாடுகளுக்கு உள்கட்டமைப்பு திட்டத்திற்கு நிதி வழங்குதல்.
- சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு திட்டத்திற்கான மாற்று
- உலகளாவிய உள்கட்டமைப்பு முதலீட்டுக்கான முன்னெடுப்பு – ஜி7 நாடுகள் ஏழு ஐரோப்பிய ஒன்றியம்.

**சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு திட்டம்**

- நிலைப்புதன்மை அற்ற கடன் மற்றும் உள் விவகாரத்தில் சீனாவின் அதிகரிக்கும் செல்வாக்கு

**உலகளாவிய உள்ளகட்டமைப்பு முதலீட்டுக்கான முன்னெடுப்பு**

- ஜனநாயக நாடுகள் மத்தியில் கூட்டுறவை ஏற்படுத்துதல் மற்றும் தொண்டு உதவிக்கு பதிலாக கடன்களை வழங்குதல்
- இந்தியா – மத்திய கிழக்கு – ஐரோப்பிய பொருளாதார வழித்தடம் .
- சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு திட்டத்திற்கு எதிரான இந்தியாவின் எதிர்வினை.

## ஜி20 கற்றதும் பெற்றதும்

- ஜி20 கூட்டமைப்பின் 18ஆவது உச்சி மாநாடு, டெல்லி பிரகதி மைதானில் அமைந்துள்ள பாரத் மண்டபம் சர்வதேச மையத்தில் செப்டம்பர் 9–10 தேதிகளில் நடைபெற்றது.
- ஜி20 யின் உறுப்பு நாடுகள், ஒவ்வோர் ஆண்டும் சுழற்சி முறையில் தலைமைப் பொறுப்பேற்றுவரும் நிலையில், 2022–2023 ஆம் ஆண்டுக்கு இந்தியா தலைமையேற்றிருந்தது.
- அந்த வகையில், டெல்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாடு, இந்தியாவில் நடைபெற்ற முதல் ஜி20 மாநாடகவும் அமைந்தது.

**ஜி20 யின் பின்னணி**

- 1990களின் இறுதியில் நிலவிய உலகளாவியப் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் விதமாக, ஜி20 (G20/Group of 20) கூட்டமைப்பு 1999 இல் தொடங்கப்பட்டது.
- உலகின் மிகப் பெரிய (வளர்ச்சியடைந்த – வளர்ந்து வரும்) பொருளாதார நாடுகளின் நிதியமைச்சர்களின் கூட்டமைப்பாகத் தொடங்கப்பட்ட இது, 2008 பொருளாதராப் பெருமந்தத்துக்குப் பிறகு, நாடுகளின் தலைவர்கள் கூடும் உச்சி மாநாடாக ஆண்டுதோறும் நடைபெற்றுவருகிறது.
- உலகப் பொருளாதாரத்துடன் தொடர்புடைய சர்வதேசப் பொருளாதார ஸ்திரநிலை, காலநிலை மாற்றம் சார்ந்த மட்டுப்படுத்துதல் ( mitigation), நீடித்த வளர்ச்சி ஆகியவை சார்ந்த பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்வுகளை எட்டுவதை இக்கூட்டமைப்பு முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

**ஆப்பிரிக்க யூனியன்**

- அமெரிக்கா, அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், பிரிட்டன், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்ஸிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, தென்கொரியா, துருக்கி ஆகிய 19 நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் ஜி20 கூட்டமைப்பின் உறுப்பினர்களாக உள்ளன.
- இந்நிலையில், இக்கூட்டமைப்பின் புதிய நிரந்தர உறுப்பினராக ஆப்ரிக்க ஒன்றியம் (African Union, AU) இந்த ஆண்டு இணைந்திருக்கிறது. அந்த வகையில் ஜி20 உறுப்பினர்களின் எண்ணிக்கை தற்போது 21 ஆக உயர்ந்திருக்கிறது.

**இந்தியாவின் தலைமை**

- இந்தோனேசியாவிடமிருந்து கடந்த அண்டு (1 டிசம்பர் 2022) தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இந்தியா, 'வசுதைவ' குடும்பகம் (ஒரே பூமி, ஒர குடும்பம், ஒரு எதிர்காலம்) என்பதைக் கருப்பொருளாக அறிவித்தது.
- வழக்கமான முறையில் ஒரே நிகழ்விடத்தில் அல்லாமல், 60 நகரங்களில் 200 கூட்டங்களை 125 நாடுகளிலிருந்து வந்த ஒரு லட்சம் அதிகாரப்பூர்வப் பங்கேற்பாளர்களைக் கொண்டு நடத்தியது.

**மூன்று அம்சங்கள்**

**ஒன்று**

- 55 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஆப்ரிக்க ஒன்றியம் ஜி20 யில் இணைந்தது. இந்தியாவின் தெற்குலக முன்னெடுப்புக்கு (Global South Initiative) முக்கியப் பங்காற்றும் எனக் கருதப்படுகிறது.

**இரண்டு**

- காலநிலை மாற்றத்தின் காலத்தில், புதைபடிவ எரிபொருளிலிருந்து மாற்று எரிசக்திக்கு மாறும் நடவடிக்கையில், இந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்ட 'உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணி' (The Global Biofuel Alliance) மிகப் பெரிய முன்னெடுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மூன்று**

- இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கான இந்தியா-மத்தியக் கிழக்கு – ஐரோப்பா பாதை (India-Middle East - Europe Corridor) மிகப் பெரிய அளவிலான முதலீடுகளை ஈர்க்கும் என நம்பப்படுகிறது.

**புது டெல்லி பிரகடனம்**

- சீன அதிபர் ஷி ஜின்பிங்-க்குப் பதிலாகப் பிரதமர் லீ கியாங் பங்கேற்பார் என சீன அரசு அறிவித்திருந்தது. சீன அதிபராகப் பொறுப்பேற்றதிலிருந்து (2013) ஜி20 மாநாடுகளில் தவறாமல் பங்கேற்றுவந்த ஜின்பிங், டெல்லி மாநாட்டில் பங்கேற்காததற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன.
- சர்வதேசப் பொருளாதார ஒத்துழைப்புக்காகத் தொடங்கப்பட்ட ஜி20 – யில் 'புவிஅரசியல் பிரச்சினை' யான உக்ரைன் போர் பற்றிய விவதத்தைத் தொடர்ச்சியாக உள்ளடக்குவது குறித்த அதிருப்தியை வெளிப்படுத்துவதன் மூலம் ஜி20 யையே அவர் நிராகரிக்கிறார் என்பது அவற்றுள் ஒன்று.

**கவனிக்க வேண்டியவை**

- 2008 தொடங்கி சுழற்சி முறையில் பல்வேறு நாடுகளில், உச்சி மாநாடுகள் நடந்து வந்திருக்கின்றன.
- நவம்பர் 30 அன்று இந்தியாவின் தலைமைக் காலம் முடிவடையும் நிலையில், பிரேசில் அடுத்த தலைமையாகப் பொறுப்பேற்றிருக்கிறது.
- ஏற்றத்தாழ்வு, ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் ஆகியவற்றில் பிரேசில் கவனம் கொள்ளும் என அந்நாட்டின் அதிபர் லூலா டி சில்வா அறிவித்துள்ளார்.

**20 நாடுகளின் கூட்டமைப்பு**

- நாடுகளுக்கிடையேயான கூட்டமைப்பு – 19 நாடுகள் + ஐரோப்பிய ஒன்றியம்.
- உலகளாவிய நிகர உற்பத்தியில் 90%
- சர்வதேச வர்த்தகத்தில் 75-80%
- உலகில் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு
- உலகின் மொத்த நிலப்பரப்பில் பாதி பங்கு
- 1999 உலகின் பொருளாதார நெருக்கடியில் பதிலளிக்கும் நோக்கில் உருவாக்கம்.
- மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் நிதி அமைச்சர்களுக்காக செயல்படக் கூடியது.
- 2008 உலகளாவிய பொருளாதார நெருக்கடியில் அரசாங்கத்தின் நிலையை மேம்படுத்துதல்.
- வழக்கமாக ஒவ்வொரு வருடமும் கூட்டத்தை கூட்டுகின்றனர்.
- 2009 சர்வதேச பொருளாதார கூட்டமைப்புக்காக முக்கியமான அமைப்பு என பிரகடனப்படுத்தியது.
- தலைமை

  – அதனுடைய உறுப்பினர்களுக்கிடையே சுழற்சி முறையில் தலைமை பொறுப்பு வழங்கப்படும்.

**மூன்று கூட்டமைப்பு**

- தலைமை வகிக்கும் நாடு, அதற்கு முன்,பின் தலைமை வகிக்கிற நாடுகளுடன் இணைந்து செயல்படும்.

  – தீர்மானத்தின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக

**ஜி20 மாநாட்டின் விளைவு**

- ஜி20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியம் இணைந்தது.
- ஆப்பிரிக்க ஒன்றியம் முழுநேர உறுப்பினரானது.
- 55 நாடுகளின் கூட்டமைப்பு
- முந்தையநிலை – சர்வதேச சிறப்பு அமைப்பாளர்
- ஜி20 முழு நேர உறுப்பினர் : ஐரோப்பிய ஒன்றியம் போல ஆப்பிரிக்க ஒன்றியமும் முழு நேர உறுப்பினர் ஆனது.

**இந்தியா – மத்திய கிழக்கு – ஐரோப்பா – அமெரிக்கா வழித்தடம்**

- நாடுகளின் தலைவர்கள் இப்பாதையை முன்மொழிந்து மற்றும் ஒப்புதல் அளித்துள்ளன.
- இந்திய – மத்திய கிழக்கு – ஐரோப்பிய பொருளாதார பாதை – இப்பகுதியில் பொருளாதார தேவையை பூர்த்தி செய்யும் மிகப்பெரிய திட்டம்.

**காலநிலை மாற்றம்**

- காலநிலை மாற்றத்தில் அதிகரிக்கக்கூடிய முன்னேற்றத்திற்கு ஒப்புதல்.
- 2030க்குள் உலகளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை மூன்று மடங்காக மாற்ற ஒப்புதல்.
- நிலக்கரி ஆற்றல் விநியோகத்தை எந்தவொரு இடையூறுமின்றி படிப்படியாக குறைத்தல்

**கவனம் செலுத்தும் பகுதி**

- எந்தவொரு புதிய பருவநிலை இலக்குகள் உட்புகுத்தப்படவில்லை
- தேவைப்படக்கூடிய நிதியை திரட்ட எந்த ஒரு வழியும் வகுக்கப்படவில்லை.

**ரஷ்யா – உக்ரைன் போர் பற்றி**

- கட்டாயத்தின் பேரில் ஜி20 நாடுகளின் பகுதியை கைப்பற்றாது என ஒப்புதல் அளித்துள்ளது.
- போருக்காக ரஷ்யாவை நேரடியாக விமர்ச்சிப்பதை தவிர்த்தல்.
- முந்தைய ஆண்டிலிருந்து ஜி20 நிலையை மென்மையாக்குவது என விளக்கப்பட்டு உள்ளது.

SURESH

## உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டமைப்பு

- இந்தியா முன்மொழிந்தது.
- அர்ஜென்டினா, வங்கதேசம், பிரேசில், இந்தியா. இத்தாலி, மொரிஷியஸ், தென் ஆப்பிரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அமெரிக்கா ஆகியன உறுப்பு நாடுகள்.

  பார்வையாளர் - கனடா மற்றும் சிங்கப்பூர்

**நோக்கம்**

- உயிரி எரிபொருள் பயன்பாட்டை அதிகரித்தல்
- 20% எத்தனால் கலப்பு

**புதைபடிவ எரிபொருள் (எதிர்) உயிரி எரிபொருள்**

**புதைபடிவ எரிபொருள்**

- இயற்கையான முறையில் மிகவும் மெதுவாக கரிம பொருளிலிருந்து உருவாகும்.
- உயிரி எரிபொருள் - கரிம பொருளிலிருந்து மிக வேகமாக உருவாக்க முடியும்.

  (எ - கா) உயிரி எத்தனால், உயிரி டீசல், உயிரி வாயு

**பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு உருவாக்கம்**

- கடல்வாழ் தாவரங்கள் மற்றும் விலங்குகள் இறந்தபின் கடலின் பரப்பில் படிகிறது. அதன் மேல் மண் மற்றும் படிவுகள் படிந்து உருவாகும்.
- கடலில் 300-400 மில்லியன் வருடங்களுக்கு முன் உள்ள நிகழ்வு
- மில்லியன் வருடத்திற்கு பின் இறந்த கழிவுகள் புதைந்து மிக ஆழத்தில் உருவாகும்.
- இக் கழிவுகள் புதைவதால், மிகப்பெரிய வெப்பம் மற்றும் அழுத்தத்தின் மூலம் உருவாகும்.
- நீர் 100 மில்லியன் வருடத்திற்கு முன்
- இன்று மண், புதை மற்றும் பாறைகளை குடைந்து இயற்கை வாயு படிவு மற்றும் எண்ணெய் எடுக்கப்படுகிறது.

**எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டம்**

- உயிரி எரிபொருள் தேசிய கொள்கை 2018
- 2022க்குள் 10% கலப்பு
- 2025க்குள் 20% கலப்பு

**நன்மைகள்**

- பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை குறைக்கும்.
- இந்தியாவை கார்பன் நடுநிலைத்தன்மை அடைய உதவும்.
- ஆற்றல் பாதுகாப்பு, இறக்குமதி சார்பை குறைத்தல். அந்திய செலாவணி இருப்பை பாதுகாத்தல் மற்றும் உலகளாவிய எண்ணெய் விலை காரணமாக காப்பீடு.
- வேளாண் துறை மேம்பாடு - கரும்பு மற்றும் சோளம் சந்தை அதிகரிப்பு, விவசாயிகள் வருமானத்தால் ஊரகம் மேம்பாடு அடையும்.
- இயந்திர செயல்திறன் –அதிகளவிலான இயந்திர செயல்திறன்

## கிரஷம் சட்டம்

**கிரஷம் சட்டம்**

- ஆங்கிலேயரான தாமஸ் கிரஷம் என்பவரின் பெயரால் அழைக்கப்படுகிறது.
- கிரஷம் - 1500 களில் ஆங்கில முடியாட்சியில் நிதி ஆலோசகராக இருந்தவர்.

**கொள்கை : "கெட்ட பணம் நல்லதை விரட்டுகிறது".**

- இக்கொள்கையானது, இரண்டு நாணயங்களுக்கு இடையேயான மாற்று விகிதமானது அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

**மாற்று விகிதம் – சந்தை அழுத்தத்தால் நிர்ணயித்தல்**

- இந்தியா - ரூபாயின் மாற்று விகிதமானது தேவை மற்றும் அளிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.
- டாலரின் அதிக தேவை + குறைவான அளிப்பு = டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு குறையும்.
- டாலரின் தேவை குறைவு = டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு

**மாற்று விகிதம் அரசால் நிர்ணயிக்கப்படுகிறது**

- இந்திய அரசாங்கம் மாற்று விகிதத்தை நிர்ணயிக்கிறது. டாலருக்கான அதிக தேவை ஆனால் சந்தை மதிப்பு இல்லை.

விளைவு

- அந்நிய செலவாணி சந்தையில் டாலர் வைத்துள்ள நபர் அதை விற்க முடியாது.

காரணம்

- டாலரை விற்பதால் குறைந்த லாபம் கிடைக்கும்

விளைவு

- கருப்பு சந்தையில் சுழற்சிக்கு விடுதல்

அதிக மதிப்பிடப்பட்ட ரூபாய்

- சுழற்சியில் உள்ளது ஆனால் போதிய வாங்குவோர் இல்லை.

**கிரஷம் சட்டம்**

கொள்கை: கெட்ட பணம் நல்லதை விரட்டுகிறது.

எ-கா - இந்தியா மாற்று விகிதத்தை நிர்ணயித்தல்

டாலர்

- முறையான சந்தையிலிருந்து நீக்கப்பட்டு கள்ள சந்தைக்கு மாற்றப்படும்.

ரூபாய்

- வாங்குவதற்கு ஆளின்றி சுழற்சியில் இருக்கும்.
- இச்சட்டமானது தங்கம், வெள்ளி போன்ற பொருளுக்கும் பொருந்தும்.

**இலங்கை பொருளாதார நெருக்கடி**

- இலங்கை மத்திய வங்கியானது இலங்கை ரூபாய் மற்றும் அமெரிக்க டாலருக்கான மாற்று விகிதத்தை நிர்ணயித்தது.

மாற்றுு விகிதம்

- ஒரு டாலருக்கு 200 ரூபாய்

விளைவு

- இலங்கை ரூபாய் அதிக மதிப்பு பெற்றது மற்றும் அமெரிக்க டாலர் குறை மதிப்பாக்கப்பட்டது.
- அந்திய பொருட்களை வாங்குவதற்கு இலங்கைக்கு அதிக அளவிலான டாலர் தேவைப்பட்டது.

விளைவு

- கருப்பு சந்தையில் வாங்க வழி செய்தது.